சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.16.06.2026.
SC.NO.204/2019
PW8 : Lw9- கார்த்திக் (வயது 44 ) த/பெ.அன்பழகன்
( 2,4 முதல் 6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர், 1,3 எதிரிகள் ஆஜர் இல்லை )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். 2014 ஆம வருடம் முதல் 2018 ஆம வருடம் வரை கொணலை கிராமத்தில் குடியிருந்து வந்தேன். கொணலை கிராமத்தில் NSR ஹோட்டலை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தேன். 06.09.2017 ஆம் தேதி எனது கடைக்கு ஈச்சர் வண்டியில் லாரி டிரைவர்கள் ரெகுலராக பார்க்கிங்கில் வண்டியை நிறுத்தி விட்டு சாப்பிட வருவார்கள். ஈச்சர் லாரியிலிருந்து ஆம்னி வேனில் சாராய பாட்டில்களை மாற்றி வைத்தார்கள். ஆம்னி வேனில் கொஞ்சமும், ஈச்சர் வண்டியில் கொஞ்சமும் இருந்தது.

அப்போது போலிசார்அங்கு வந்தததும் 5,6 பேரில் 2,3 பேர் ஓடிவிட்டார்கள். 3 பேரை மட்டும் பிடித்து விசாரணை செய்தார்கள். அதில் 2 நபர்கள் பக்கத்து ஊரை சேர்ந்வர் என்றும் 1 நபர் வெளியூரை சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள். மேற்படி நபர்கள் இங்கு ஆஜர் உள்ளார்களா என்றால் எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணை செய்துவிட்டு சரக்குகளை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

எதிரிகளை பிடித்தது தான் தெரியும் எதிரிகளை என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாகனத்தை என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அங்கு எனது வாட்ச்மேன் கிருஷ்ணமூர்த்தி இருந்தார், பஞ்சர் கடை நடத்தி வரும் மாஸ்கோ என்பவரும் இருந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை அன்றைய தினம் விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரிவேண்டப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

06.09.2017 ஆம் தேதி காலை சுமார் 9 மணிக்கு NSR ஹோட்டல் அருகில் TN 27 U 1113 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் லாரியிலிருந்து 6 நபர்கள் அட்டை பெட்டிகளில் உள்ள வெளிமாநில மது பாட்டில்களை TN 48 S 1764 என்ற பதிவெண்

கொண்ட ஆம்னிவேனில் ஏற்றிக்கொண்டிருந்ததாகவும், அப்போது திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு இன்ஸ்பெக்டர் மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் வருவதை கண்டவுடன் ஓட முயன்றவுடன் போலிசார் சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்டபோது, 3 நபர்கள் மட்டும் பிடிப்பட்டதாகவும், மற்ற நபர்கள் ஓடிவிட்டதாகவும் பிடிபிட்ட நபர்களை போலிசார் விசாரித்தபோது, கலியபெருமாள் மகன் அண்ணாதுரை கோட்டப்பிள்ளை மகன் தர்மலிங்கம் ஆகிய இருவரும் திருச்சி, மண்ணச்சநல்லூர், ராசாம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்றும் விநாயகம் மகன் மணிகண்டன் என்பவர் பாண்டிச்சேரி காட்டேரிகுப்பத்தை சேர்ந்தவர் என்றும் மேற்படி சம்பவத்தில் பிடிக்கப்பட்ட லாரி, ஆம்னிவேன் ஆகியவற்றை போலிசார் சோதனை செய்தததில் ACE AAA லேபிள் ஒட்டப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய 12 பாட்டில்கள் கொண்ட அட்டை பெட்டிகளில் 400 அட்டை பெட்டிகளும் Black Grapes என்று லேபிள் ஒட்டப்ட்ட 750 ML பிடிக்கக்கூடிய 1 2 பாட்டில்கள் கொண்ட அட்டை பெட்டிகளில் 60 அட்டை பெட்டிகளும் ஆக மொத்தம் 460 அட்டை பெட்டிகளில் 5520 மது பாட்டில்கள் இருந்ததாகவும் அதில் சம்மந்தப்பட்ட எதிரிகளை போலிசார் கைது செய்ததாகவும் அவர்களிடம் இருந்த லாரி மற்றும் ஆம்னி வேனையும் அதிலிருந்த 5520 மது பாட்டில்களையும் போலிசார் கைப்பற்றியதாகவும் இச்சம்பவத்தை கொணலையை சேர்ந்த தேவராயன் மகன் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பஞ்சர் கடை நடத்தி வந்த மாஸ்கோ ஆகியோருடன் சேர்ந்து பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>கு.வி</u>** - இல்லை என முன்மொழியப்பட்டது.

/ signed /
கார்த்திக்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி